தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

செவ்வாய்க்கிழமை 1979, அக்டோபர் 30

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்)

I. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) சென்னை மாநகரக் காவல் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, 1979-ம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, போலீஸ் சட்டத்தைத் திருத்துவதற்காக மூன்றாம் முறையாக இந்தத் திருத்தம் கொண்டு வரப்படுகிறது. நான் முதலிலேயே குறிப்பிட்டேன், எல்லாத் திருத்தங்களையும் மொத்தமாகக் கொடுத்து இருந்தால் நன்றாக இருந்து இருக்கும். இப்போது கொண்டு வரப்பட்டிருக்கும் திருத்தம் செக்ஷன் 34-க்கு. அதில், பொது இடங்களில் என்டர்டெயின்மென்ட் நடத்துவதற்கு போலீஸ் அனுமதிவேண்டும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அரசாங்கம் விளக்கம் கொடுத்து இருப்பதில், ஆபாச நிகழ்ச்சி களைத் தடுப்பதற்காக இது கொண்டு வரப்படுகிறது என்று கூறியிருக்கிறார்கள். இம்மாதிரி போட்டு இருப்பதால், கூட்டம் நடத்துவதற்குக் கூட அப்ஜெக்ட் செய்யலாம். நிதி திரட்ட கலை நிகழ்ச்சி நடத்துவதைக்கூட அப்ஜெக்ட் செய்யலாம். இப்படிச் செய்வதால், செக்ஷன் 76-ல் உள்ள ப்ரொவிசோவைக் கூட நல்லிபை செய்கிற மாதிரி இருக்கிறது.

ப்ரொவிசோவில் ஷோ காஸ் நோட்டீஸ் கொடுத்துவிட்டு ரத்து செய்ய வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் நீங்கள் இப்பொழுது சொன்னது ஷோ காஸ் நோட்டீஸ் தேவையில்லை. போலீஸ் அதிகாரிகளிடத்தில் லைசென்சுக்கு அப்ளை செய்கிற போது டெபாசிட் கட்ட வேண்டும். லைசென்சு பெற்ற பிறகும்,

[திரு. க. சுப்பு] [1979 அக்டோபர் 30

அதைக் கான்சல் செய்யலாம். அவர்கள் கட்டியுள்ள டெபாசிட்டை போர்பீட் செய்யலாம். இப்படிப்பட்ட மோசமான ஷரத்துக்கள் எமர்ஜென்ஸி காலத்தில் இருந்தது. பன்டமென்டல் ரைட்ஸ் சஸ்பென்ட் செய்யப்பட்டு இருந்த காலத்தில் போடப் பட்டிருந்த..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை எதிர்க்கிறேன் என்று இரண்டு வார்த்தைகள் திரு. சுப்பு சொன்னால் போதாதா? இவ்வளவு விரிவாகப் பேச வேண்டுமா ? இந்தச் சட்ட முன்வடிவு விவாதத்திற்கு வருகிறபோது நீங்கள் எப்படியும் பேசப் போகிறீர்கள்; அப்போது பேசிக் கொள்ளுங்கள். இப்போது வேண்டாம்.

திரு. க. சுப்பு : நான்கூட பேசியிருக்க வேண்டியது இல்லை. அப்போஸ் செய்து பேசினால், மினிஸ்டர் ப்ரீப்பாக பேச வேண்டும் என்று இருக்கிறது ரூலில். அவருக்கு கஷ்டம் கொடுக்கக் கூடாது என்றுதான் நான் பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுப்பு ஆட்சேபணை செய்வதை நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. அதைச் சுருக்கமாகத் தெரிவிக்க வேண்டும். பிறகு, இந்தச் சட்ட முன்வடிவு விவாதத்திற்கு வருகிறபோது விரிவாகப் பேசலாம், இப்போதே விரிவாகப் பேசினால் அவையின் மற்ற நிகழ்ச்சிகள் என்னாவது? விதி 92-ஐ முதலில் படியுங்கள். ப்ரீப்பாகப் பேசலாம் என்றுதான் இருக்கிறது.

திரு. க. சுப்பு : நான் சொல்ல விரும்புவது... ரூல் 92-ல் "If a motion for leave to introduce a Bill is opposed, the speaker, after permitting if he thinks fit, a brief statement from the member who moves and from a member who opposes the motion may with out further debate, put the question thereon."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதனால்தான் சொல் கிறேன், பேசுவதைச் சுருக்கமாகப் பேசுங்கள் என்று.

திரு. க. சுப்பு : ஒரு பொது இடத்தில் என்டர்டெயின் மென்ட் நடத்துவது என்பது பண்டமென்டல் ரைட். அதற்கு பர்மிஷன் கேட்கக்கூட டெபாசிட் கட்டவேண்டும் என்று கேட்கிற இந்த அரசாங்கத்தின் மனோபாவம் மோசமான மனோபாவம். ஒரு அத்தாரிடேரியன் ஆட்டிடியூடை காட்டுகிறது. ஆகவே இதை அப்போஸ் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "1979-ம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (இரண் டாவது திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்."

1979 அக்டோபர் 30]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

ஆ) சென்னை மாநகராட்சி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே,

''1979 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவை'' பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(இ) ஊராட்சிகள் (தனி அலுவலர்களை நியமித்தல்) சட்டமுன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே,

''தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அலுவலர்களை நியமித்தல்) சட்டமுன்வடிவை'' பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இச்சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.